அறிக்கையிடப்படக்கூடியது

இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

குற்றவியல் மேல்முறையீடு எண்கள் 197-198/2018

(சி.அ.ம. (குற்றவியல்) எண்கள் 10077-78/2015-இலிருந்து எழுகிறது)

தஷ்ரத் என்கிற ஜோலோ

மற்றும் ஒருவர் ... **மேல்முறையீட்டாளர்(கள்)**

எதிர்

சத்தீஸ்கர் மாநில அரசு ... **எதிர்மேல்முறையீட்டாளர்(கள்)**

<u>உத்தரவு</u>

<u>மாண்புமிகு நீதியரசர் திருமதி ஆர். பானுமதி:</u>

அனுமதி வழங்கப்பட்டது.

2. குற்றவியல் மேல்முறையீடு எண்கள் 598-99/2009-ஐ தள்ளுபடி செய்து, அதன்மூலம் விசாரணை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட குற்ற மற்றும் தண்டனைத் தீர்ப்பை உறுதிசெய்து, சத்தீஸ்கர் உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட 13.05.2014-ஆம் தேதியிட்ட தீர்ப்புரையிலிருந்து இம்மேல்முறையீடுகள் எழுகின்றன.

3. அரசுத்தரப்பு வழக்கில் சுருக்கமாக கூறப்பட்டதாவது, 3.08.2008-ஆம் தேதியன்று மதியம் சுமார் 1.30 மணியளவில் அ.சா.19-பிரிச்ராம் தனது குழந்தை (சாட்டி) பிறந்த ஆறாவது நாள் விழாவுக்காக, போஜ்ராம் என்பவரை அழைப்பதற்கு, அவரது வீட்டிற்குச் சென்றார். போஜ்ராமின் அண்டை வீட்டினர்களான

மேல்முறையீட்டாளர்கள், தங்களின் வீட்டிற்கு முன்பாக நின்றுகொண்டு, அ.சா.19-ஐ கொல்லப்போவதாக மிரட்டினர். அ.சா.19, மேல்முறையீட்டாளர்களை திட்டவேண்டாம் எனக் கேட்டுக்கொண்ட மேல்முறையீட்டாளரான தஷ்ரத் என்கிற ஜோலோ மழுவை/போர்க்கோடரியை வைத்துக்கொண்டும், போடோல் என்கிற துரியோதனும் (தற்போது இறந்துவிட்டார்) மழுவை/ போர்க்கோடரியை வைத்துக்கொண்டும், ஜக்ரு (தற்போது இறந்துவிட்டார்) கோடரியை வைத்துக்கொண்டும் மற்றும் சிலர் கம்புகளை வைத்துக்கொண்டும் அ.சா.19-ஐ தாக்கினர். சம்பவ இடம் நோக்கி வந்துகொண்டிருந்த அ.சா.14-சம்பாயும், அ.சா.17-காயத்ரி பாயும் சம்பவத்தில் தலையிட்டுத் தடுக்க முயன்றனர். அச்சமயத்தில், தனது வயலிலிருந்து வந்துகொண்டிருந்த இறந்தவரான சேதிலால், அ.சா.19-ஐ அடிக்கவேண்டாமென மேல்முறையீட்டாளர்களை வேண்டினார்; ஆனால் மேல்முறையீட்டாளர்கள், அ.சா.19-ஐ விட்டுவிட்டு, சேதிலாலை தாக்கத் தொடங்கினார். போடோல் என்கிற துரியோதன் (தற்போது இறந்துவிட்டார்) மழுவின்/ போர்க்கோடரியின் முனை மழுங்கிய பகுதியால், சேதிலாலின் தலையை உடைத்துவிட்டார். அச்சமயத்தில், இறந்தவரான புரு என்கிற பர்மானந்த், இறந்தவரான பப்லு, அ.சா.20-திலீப் குமார் யாதவ் மற்றும் அ.சா.21 ராஜேஷ் யாதவ் ஆகியோரும் ஒவ்வொருவராக சம்பவ இடத்திற்கு வந்து, தலையிட்டுத் தடுக்க முயன்றனர், ஆனால், மேல்முறையீட்டாளர்கள், அவர்களனைவரையும் தாக்கி, சம்பவ இடத்திலேயே சேதிலால், பப்லு மற்றும் புரு என்கிற பர்மானந்த் ஆகியோரின் மரணத்தை

விளைவித்தனர். அ.சா .19-பிரிச்ராம் மற்றும் அ.சா.20 திலீப் குமார் யாதவ் காயங்களடைந்தனர்.

4. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு, அவர்கள் வெளியிட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில், மேல்முறையீட்டாளரான தஷ்ரத் என்கிற ஜோலோவிடமிருந்து மழு/போர்க்கோடரி கைப்பற்றப்பட்டது; ஜக்ரு என்கிற மோகன்லாலிடமிருந்து கோடரி கைப்பற்றப்பட்டது; மேல்முறையீட்டாளர்களான ஆனந்த் மற்றும் லஷ்மியிடமிருந்து கம்புகள் கைப்பற்றப்பட்டன. குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடமிருந்து இரத்தக்கறை படிந்த துணிகளும் கைப்பற்றப்பட்டன. அதன்பிறகு பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களனைத்தும், தடய அறிவியல் ஆய்வகத்திற்கு இரசாயன பரிசோதனைக்காக அனுப்பப்பட்டு, துணிகள் மற்றும் ஆயுதங்கள் மீதிருந்த இரத்தம் த.அ.ஆ. அறிக்கை (அ.சா.ஆ.71) மூலம் உறுதி செய்யப்பட்டது. புலனாய்வு முடிந்தபிறகு, மேல்முறையீட்டாளர்கள் மற்றும் பிற குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக, குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது

5. குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் குற்றத்தை மெய்ப்பிக்க, அரசுத்தரப்பு 22 சாட்சிகளை விசாரித்துள்ளது. விசாரணை நீதிமன்றமும் எதிர்த்தரப்பு சாட்சியான பி.சா.1-மருத்துவர் ஆஷுதோஷ் மிஷ்ராவை விசாரித்தது. மேல்முறையீட்டாளர்கள் சேதிலால், பப்லு மற்றும் புரு ஆகியோரை கொலைபுரியும் பொதுவான உட்கருத்துடன், பிரிச்ராமை கொலை செய்ய முயன்று, கொடிய ஆயுதங்களை வைத்துக்கொண்டு சட்டவிரோதமாகக் கூட்டம் கூடி, குற்றத்தைப் புரிந்ததாக விசாரணை நீதிமன்றம் கண்டறிந்து, இ.த.ச., பிரிவு 302 உடனிணைந்த பிரிவு 149-இன் கீழ்

அனைத்து எட்டு குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் தண்டிக்கப்பட்டு, ஆயுள் சிறைத்தண்டனை அனுபவிக்கும்படி அவர்களை தண்டித்தது. அவர்கள், பிற குற்றங்களுக்காகவும் தண்டிக்கப்பட்டு, சிறைத் தண்டனையளிக்கப்பட்டது.

6. பாதிப்படைந்த குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அனைவரும் உயர் நீதிமன்றம் முன்பாக மேல்முறையீடுகளைத் தாக்கல் செய்தனர். உயர் நீதிமன்றம் முன்பாக மேல்முறையீடு நிலுவையிலிருக்கையில், குற்றஞ்சாட்டப்பட்டவர்களான போடோல் என்கிற துரியோதனும், மோகன்லாலும் இறந்துவிட்டனர். இங்குள்ள மேல்முறையீட்டாளர்களால் (தஷ்ரத் என்கிற ஜோலோ, ஆனந்த் மற்றும் லஷ்மி) முன்கொணரப்பட்ட மேல்முறையீட்டை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து, அவர்கள்மீது விசாரணை நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட குற்றத்திற்கான தீர்ப்பையும், விதிக்கப்பட்ட தண்டனையையும் உறுதி செய்தது. குற்றஞ்சாட்டப்பட்ட பெண்களான துஜ்மதி மற்றும் திரிவேணி பாய் உயர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

7. முதலாம் மேல்முறையீட்டாளரான தஷ்ரத் என்கிற ஜோலோ மழு/போர்க்கோடரியை வைத்துக் கொண்டும், இறந்தவரான குற்றஞ்சாட்டப்பட்ட ஜக்ரு கோடரியை வைத்துக்கொண்டும், மற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் கம்புகளை வைத்துக்கொண்டும், இறந்துபோன நபர்கள் மீது காயங்களை விளைவித்தனர். விசாரணை நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும், காயமடைந்த கண்ணுற்ற சாட்சியான அ.சா.19-இன் சாட்சியத்தை ஏற்றுக்கொண்டுள்ளது, அவருடைய சாட்சியே முக்கியமான ஆதாரமாக விளங்குகிறது.

இங்குள்ள மேல்முறையீட்டாளர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. அ.சா.14 (சம்பாய்)-ஆல் உறுதியூட்டப்-பட்டதான, அ.சா.19-காயமடைந்த கண்ணுற்ற சாட்சியின் சாட்சியத்தை மதிப்பிட்டதன்பேரிலும், இங்குள்ள மேல் முறையீட்டாளர்களிடமிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்ற பொருண்மையைப் பரிசீலித்தும், மேல்முறையீட்டாளர்களும், இறந்துபோன ஜக்ரு உட்பட பிற குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் மற்றும் பலரும், சேதிலால், பப்லு மற்றும் புரு என்கிற பர்மானந்த் ஆகியோரை கொலைபுரியும் பொதுவான உட்கருத்துடன் சட்டவிரோதமாக கூட்டங்கூடியுள்ளனர் என்ற காண்முடிவுகளை விசாரணை நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் பதிவு செய்தன.

8. மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் எழுப்பப்பட்ட வாதமானது, குற்றமுறையீட்டாளரும், இறந்துபோனவரும் குழந்தை பிறந்ததை வெகு விமரிசையாகக் கொண்டாட விரும்பிய இடமான மேல்முறையீட்டாளர்களின் வீட்டின் முன்பு சம்பவம் நடந்தது மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் எச்செயலும், அவர்களின் தற்காப்புக்காகவேதான் புரிந்தனர் என்பதாகும். மேல்முறையீட்டாளர்களின் வீட்டின் முன்பாக சம்பவம் நடந்ததால் மட்டும் குற்றமுறையீட்டாளர் தரப்புதான் தாக்கியவர்கள் எனச் சொல்லப்படமுடியாது. எவர் தாக்கினர் என்பது குறித்து அறிந்துகொள்வதற்கு, முழுச் சம்பவமும், அதற்குரிய பின்னணியும் உரிய கவனமுடன் ஆராயப்படவேண்டும். காயமடைந்த பிரிச்ராம் (அ.சா.19) போஜ்ராமின் வீட்டிற்குச் சென்று, அவரையும் மற்றும் பலரையும் குழந்தை (சாட்டி) பிறந்த ஆறாவது நாள் விழாவிற்கு அழைத்தார்; போஜ்ராமின் அண்டை வீட்டுக்காரர்களான

மேல்முறையீட்டாளர்கள், அவர்களின் வீட்டின் முன்பாக இருந்தனர்; அவர்கள் பிரிச்ராமை (அ.சா.19) சண்டைக்கிழுத்தனர். பிரிச்ராம் (அ.சா.19), போஜ்ராம் வீட்டிற்குச் சென்று, அவரை விழாவுக்கு அழைத்தபோது, ஆயுதம் ஏதும் வைத்திருக்கவில்லை; மேல்முறையீட்டாளர்கள்தான் மழுவும்/போர்க்கோடரியும், கம்புகளும் வைத்திருந்ததாகச் சொல்லப்பட்டது. முழுச் சம்பவத்தையும், அதன் சூழ்நிலைகளையும் பரிசீலித்து, குற்றமுறையீட்டாளர் தரப்பினரே தாக்கியவர்கள் என்றும், மேல்முறையீட்டாளர்கள் தற்காப்பில் ஈடுபட்டனர் என்றுமான வாதுரையை, கீழமை நீதிமன்றங்கள் சரியாகவே எதிர்மறையாக்கின.

9. கற்றறிந்த வழக்குரைஞரால் வலியுறுத்தப்பட்ட அடுத்த வாதமானது, அரசுத்தரப்பு மேல்முறையீட்டாளர்களின் உடலின் மீதான காயங்களைக் குறித்து விளக்குவதற்கு விரும்பவில்லை, இது அரசுத்தரப்பு வழக்கிற்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகும். குற்றம் சாட்டப்பட்டவர்கள் அதே சம்பவத்தில் காயமடைந்தனர் எனும்போது, அக்காயத்தைக் குறித்து விளக்கமளிப்பது அரசுத்தரப்பின் கடப்பாடு என்பதையும், அரசுத்தரப்பு அவ்வாறு செய்யத் தவறினால் அரசுத்தரப்பு வழக்கு நம்பப்படக்கூடாது என்பதையும் சட்டத்தின் கருத்தென்றோ அல்லது நிலையான விதி என்றோ தீர்மானிக்க இயலாது. குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் உடலின் மீதான காயங்கள் குறித்து அரசுத்தரப்பால் விளக்கப்படாமலிருப்பது அரசுத்தரப்பு வழக்கைப் பாதிக்கலாம் எனத் தீர்மானிப்பதற்குமுன், நீதிமன்றம் உள்ளபடியான இரு நிபந்தனைகளை நிறைவு செய்யவேண்டும்:

(i) குற்றம் சாட்டப்பட்டவரின் உடலின் மீதான காயம், கடுமையான தன்மையுடையது; மற்றும் (ii) அக்காயங்கள், வினாவிற்கிடமான சம்பவ சமயத்தில் விளைவிக்கப்பட்டு இருக்கவேண்டும்.

[காண்க: தஉறாஜி உறிராஜி -எதிர்- தக்கோர் கூபர்சிங் சமன்சிங், (2001) 6 எஸ்.சி.சி. 1454]

10. விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையை ஆராய்ந்து பார்ப்பதன் மூலம், மேல்முறையீட்டாளர்களால் அடையப்பெற்ற காயங்கள் சாதாரண தன்மையுடையவை என்றும், அவ்வாறிருக்கையில், அக்காயங்கள் குறித்து விளக்கமளிப்பது அரசுத்தரப்பின் கடமையல்ல என்றும் தெரிய வருகிறது. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது காணப்பட்ட அக்காயங்கள் தானே ஏற்படுத்திக்கொண்டவை என மருத்துவர்களிடமிருந்து வந்த பதில் விளக்கத்தை குறித்துக்கொள்வதும் உகந்ததாகும்.

11. சாட்சியத்தை மதிப்பிட்டதன்பேரிலும், காரணவிளக்கங்களை நன்கு பரிசீலித்ததன்பேரிலும், விசாரணை நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும், இ.த.ச., பிரிவு 302 உடனிணைந்த இ.த.ச., பிரிவு 149-இன் கீழும் மற்றும் பிற குற்றங்களுக்காகவும் மேல்முறையீட்டாளர்கள்/குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு சரியாகவே தண்டனை வழங்கியுள்ளது.

மேல்முறையீட்டாளர்/ குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது விதிக்கப்பட்ட சிறைத்தண்டனைத் தீர்ப்பில் குறுக்கீடு நாங்கள் காரணமேதும் காணவில்லை. மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டன.

மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர்.கே. அகர்வால்

மாண்புமிகு நீதியரசர் திருமதி. ஆர். பானுமதி

புதுதில்லி
ஜனவரி 23, 2018

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."